අමාත්‍යාංශ , දෙපාර්තමේන්තු, පළාත් සභා සහ පළාත් පාලන ආයතනවලට
අදාළ රාජ්‍ය ගිණුම් පිළිබඳ කමිටුව මගින් පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන වාර්තා සම්බන්ධයෙන් ආයතන භාර අමාත්‍යවරයාගේ
නිරීක්ෂණ සහ ගන්නා පියවර ඉදිරිපත් කිරීම

அமைச்சு, திணைக்களம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின் மூலமாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் அறிக்கை தொடர்பாக நிறுவனங்களுக்கு பொறுப்பான அமைச்சரின் அவதானிப்புக்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைளைச் சமர்ப்பித்தல்

Presenting the actions taken and observations made by the Minister in charge of institutions regarding the reports submitted to the Parliament by the Committee on Public Accounts related to Ministries/Departments/Provincial Councils and Local Government Institutions

2022 වර්ෂය
2022 ஆம் ஆண்டு
Year – 2022

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - මහනුවර
மாவட்ட செயலகம் – கண்டி
District Secretariat – Kandy

அமைச்சு/ திணைக்களம்/ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின் மூலமாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் அறிக்கை தொடர்பாக நிறுவனங்களுக்கு பொறுப்பான அமைச்சரின் அவதானிப்புக்கள் மற்றும் மேற்க்கொள்ளப்பட்ட நடவடிக்கைளைச் சமர்ப்பித்தல் . 2022

பாராளுமன்றதொடர் இலக்கம் - 79

மாவட்ட செயலகம் - கண்டி (செலவினத் தலைப்பு-258)

அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின் மூலமாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் அறிக்கை தொடர்பாக நிறுவனங்களுக்கு பொறுப்பான அமைச்சரின் அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலமாக மேற்க்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்	தற்போதைய நிலைமை
1 ஆம் பிரிவு 2020.08.28 ஆம் திகதி 01/2020 ஆம் இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையின் 1 ஆம் பிரிவின் 11.1 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையரைக்குள் நி.பி. 756(6) இற்க்கு அமைய தொகை மதிப்பீடு செய்து குறித்த தினத்தில் அவ் அறிக்கையை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை.	2020.08.28 ஆம் திகதி 01/2020 ஆம் இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான குறித்த தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகளை நிறைவு செய்து தாமதமின்றி 2023.02.27 ஆம் திகதி கணக்காய்வு அத்தியட்சகர் - தேசிய அரச கணக்காய்வுக் கிளைக் காரியாலயம் – மாவட்ட செயலகம் கண்டிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	2020.08.28 ஆம் திகதி 01/2020 ஆம் இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையின் 11.1 இன் படி குறித்த அறிக்கையை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு முன்வைதத்தில் காலதாமதமில்லை. 2023 ஆம் ஆண்டிற்கான உரிய அறிக்கை 2024.06.13 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நிலுவைக் கடன் மிகுதிகள் காணப்படல்	**பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.** **ஆர்.எல்.ஏ.கே. பெரேரா (சாரதி)** முறையான ஒழுக்காற்று விசாரணை செய்யப்பட்டுள்ளதோடு உத்தியோகத்தர் மீள் பணிக்கமர்த்தி கமத்தொழில் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ளார். அதற்கமைய 2023.03.31 ஆம் திகதி பேரேட்டுக் குறிப்புக்களுக்கமைய மாதாந்த கணக்குச் சாராம்சத்தினூடாக கடன் மிகுதி சீராக்கப்பட்டுள்ளது.	**பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.** 2023 ஆம் ஆண்டிற்குரிய இணக்க அறிக்கைக்கு அமைய பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தயோகத்தர்களின் கடன் மிகுதிகள் இல்லை என்பதனைக் குறிப்பிடுகின்றேன்.

	<u>சேவையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர்கள்.</u> ➢ திரு. ஆர்.ஏ. அஜித் குமார (அ.சே.உ.) நீதிபதி ஆலோசனை பெறுவதற்காக நீதிபதிக்கு அறிக்கையிடல் மற்றும் அதற்குரிய பதில் 2024.01.06 ஆம் திகதி கிடைக்கப்பெற்றுள்ளது. ➢ திரு.எச் .பீ. ஹரிஸ்சந்திர கிராம உத்தியோகத்தர் – மினிப்பே	**<u>சேவையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர்கள்.</u>** ➢2024.01.06 ஆம் திகதி நீதிபதி ஆலோசனை கிடைக்கப் பெற்றுள்ளதோடு, வழக்குக் கோப்பு தொலைந்துள்ளமையினால் பிணையாளரர்களின் விபரங்களை திரட்டுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.ஆகினும், 2024.05.29 ஆம் திகதி 01/2024 ஆம் இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலுவைக் கடன் மிகுதியை கைவிடுதல் தொடர்பாக மேலதிக நடவடிக்கைசெய் மேற்க் கொள்ளப்படுகின்றது என்பதனை குறிப்பிடுகின்றேன். ➢2023.09.13 ஆம் திகதி கடன் அறவீடு நிறைவடைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டு இணக்ககூற்றில் இவ் கடன் மிகுதி இல்லை. அத்தோடு, 2023 ஆம் ஆண்டு அரச ஊழியர்களின் முற்பண கணக்கு இணக்க அறிக்கையின் பிரகாரம் டீ.எஸ்.பீ. தர்மசேன அவர்களின் (சாரதி) ஒரு வருடத்திற்கு மேற்ப்பட்ட காலமாக நிலுவைக் கடன் மிகுதிகள் காணப்படுவதோடு, அந் நிலுவையை தற்போது பிணையாளரர்களிடமிருந்து மாதாந்தம் அறவிடப்படுகின்றது. (2024.07.31 ஆம் திகதிக்கு நிலுவைக் கடன் மிகுதி ரூ. 96,255.00 ஆகும்.)

நி.பி 472(2) இன் பிரகாரம் மாதாந்த இணக்க அறிக்கை பொதுத் திறைச்சேரிக்கு சமர்ப்பிக்கப்படாமை.	பொதுத் திறைச்சேரியில் நிலவும் கணக்கு மற்றும் மாவட்ட செயலகத்தில் நிலவும் கணக்கு ITMIS மற்றும் CIGAS இன் மூலம் தொகுக்கப்பட்ட கணக்கு சுருக்கத்தை தயாரித்து அரச கணக்குகள் திணைக்களத்தின் திறைச்சேரி கணக்கு மீதிகளுடன் மாதாந்தம் ஒப்பீடு செய்து வேறுபாடுகள் காணப்படும் போது மாத்திரம் வேறுபாடுகளை அறிவித்து திறைச்சேரிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்க் கொள்ளப்பட்டுள்ளது. அரச கணக்குகள் சுற்றறிக்கை 257/201 இன் படி மற்றும் வருடாந்த கணக்குகள் தயாரிக்கும் சுற்றறிக்கையின் படி வேறுபாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் அறிக்கையிட சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளதோடு, நி.பி 426இன் பிரகாரம் நடவடிக்கை மேற்க் கொள்ளப்படுகின்றது என்பதனை குறிப்பிடுகின்றேன்	வேறுபாடுகள் காணப்படாவிடினும் அது தொடர்பாக திறைச்சேரிக்கு அறிவிப்பதற்கு 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் ஜலை மாதம் வரை நடவடிக்கை மேற்க் கொள்ளப்பட்டுள்ளது.
நி.பி. 371 இன் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள தேவை நிமித்த உப பணி முற்பண நடவடிக்கை முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்க்கப்படாமை	கௌரவ சனாதிபதியின் துக்கப்பிரகடண நிகழ்ச்சிக்காக மலர்வளையம் கொள்வனவு செய்ய வழங்கப்பட்ட முற்பணத்திற்காக சனாதிபதியின் செயலாளர் அலுவலகத்திலிருந்து தாமதமாக காசோலை கிடைக்கப்பெற்றுள்ளது. இங்கு உள்ளக கட்டுப்பாட்டை மேலும் சீர்படுத்துவதற்காக 2023.10.30 ஆம் திகதி 03/2023 இலக்கமுடைய மாவட்ட செயலாளர் கட்டளை நிறுவப்பட்டுள்ளது.	தற்போது முற்பணம் தீர்ப்பதில் தாமதங்கள் இடம் பெறவில்லை.
அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கு மீதிகள் திறைசேரியின் ஏடுகளுடன் காலாண்டு ரீதியாக ஒப்பீடு செய்யும் கட்டுநிதி இணக்க கூற்றினை குறித்த திகதிக்கு முன்னர் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்காமை	கட்டுநிதி ஒப்பீட்டுச் செயற்பாடு காலாண்டு அடிப்படையில் செய்யப்பட்டுள்ளதோடு, திறைசேரிக்கு அறிக்கையிடும் போது தாமதம் ஏற்பட்டுள்ளது. தற்போது தொடர்ச்சியாக காலாண்டு அடிப்படையில் ஒப்பீட்டுச் செயற்பாடு கூடிய மேற்பார்வையுடன் இடம்பெறுகின்றது.	தற்போது குறித்த திகதிக்கு முன்னர் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்பிக்கப்படுவதோடு, 2024.06.30 ஆம் திகதி வரையில் குறித்த அறிக்கை குறிப்பிட்ட திகதியில் சமர்பிக்கப்பட்டுள்ளது.

நி.பி. 94 (1) இன் பிரகாரம் செலவினத் தலைப்பிற்க்கு ஒதுக்கீடு செய்த ஒதுக்கீட்டுத் தொகை பிரயோகத்தின் பின்னர் வருட இறுதியில் எஞ்சிய ஒதுக்கீட்டு எல்லை மீறும் வகையில் பொறுப்புக்களில் அணுகி இருத்தல்.	அனைத்து ஆண்டுகளிலும் இறுதி மாதங்களுக்குரிய தொலைபேசி, நீர், மின்சாரம் மற்றும் ஏனைய ஒப்பந்தம் செய்த சேவைகளுக்குரிய பட்டியல்கள் அடுத்த வருட ஆரம்பத்தில் கிடைக்கப் பெறுவதோடு, அதற்கமைய முன்னைய ஆண்டின் இறுதி மாதங்களுக்குரிய பட்டியல்கள் நடப்பாண்டின் ஆரம்பத்தில் செலுத்தப்படும். அதற்கமைய மேற்குறித்த சேவைகளுக்கான கணிப்புக்கள் அதிகரித்தமையும் செலவு அதிகரித்தமைக்கு காரணமாகியுள்ளது. அத்தோடு அத்தியாவசிய விடயங்களுக்காக மேலதிக ஒதுக்கீடு கிடைக்கப் பெறாமையினால் மாற்றீடுகள் இடம் பெற்றுள்ளது. தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 03/2022 மற்றும் 01/2024 இன் பிரகாரம் செலவு முகாமை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	2024 ஆம் ஆண்டின் இறுதி நிதிக்கூற்றின் பொறுப்புக்களில் உள்ளிடுவதற்கு முறையான திட்டமிடல் செய்தல்.
<u>2 ஆம் பிரிவு</u>		
மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாதாந்தம் நடாத்தப்படாமை	2022 ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய பொருளாதார உறுதியற்ற தன்மை மற்றும் செலவின முகாமை தொடர்பாக திறைசேரியினால் கிடைக்கப் பெற்ற ஆலோசனைகளின் படி இவ் குழு இடம்பெறும் நோக்கங்களை கருத்திற் கொண்டு, முக்கியமாக நடாத்தப்பட வேண்டிய குழு எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டது. ஆயினும் மக்களுக்கு வழங்கும் சேவை காலதாமதமின்றி வழங்க குழுக்களுக்கு கிடைக்கப் பெற்ற பிரச்சினைகள், கருத்துக்கள் மற்றும் ஆலோனைகள் தொடர்பாக சந்தர்ப்பத்திற்கு உகந்தவாறு ZOOM தொழில்நுட்பத்தினூடாகவும் நடாத்தப்பட்ட ஏனைய கூட்டங்களில் பொறுப்பு கூறக்கூடிய உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தி உரிய நடவடிக்க எடுக்கப்பட்டது.	2023 ஆம் ஆண்டு 10 கூட்டங்கள் மற்றும் 2024 ஜலை மாதம் 31 ஆம் திகதி வரை 06 கூட்டங்கள் நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதேசச் செயலக ஒன்றுகூடல் மாதாந்தம் நடாத்தப்படாமை	-அவ்வாறே -	2023 ஆம் ஆண்டு 02 பிரதேசச் செயலக ஒன்றுகூடல்கள் நடாத்தப்பட்டுள்ளது.
1946 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்திற்கமைய மாவட்ட விவசாய குழுக் கூட்டம் மாதாந்தம் நடாத்தப்படாமை	-அவ்வாறே -	2023 ஆம் ஆண்டு 06 கூட்டங்கள் மற்றும் 2024 ஆம் ஆண்டு 03 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது.
மாவட்ட வீடமைப்புக் கூட்டம் மாதாந்தம் நடாத்தப்படாமை	-அவ்வாறே -	2023 ஆம் ஆண்டு 05 கூட்டங்கள் மற்றும் 2024 ஆம் ஆண்டு 04 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது.
மாவட்ட உர (பொஹொர) ஒருங்கிணைப்புக் குழு மாதாந்தம் ஒன்றுகூடாமை	-அவ்வாறே -	2023/24 பெரும்போகத்தில் மற்றும் 2024 சிறுபோகத்தில் குழுக் கூட்டம் தற்போது நடாத்தப்பட்டுள்ளது.
மாவட்ட மற்றும் பிரதேச போதைப்பொருள் ஒழிப்பு குழுக் கூட்டம் காலாண்டிற்கு ஒரு தடவை ஒன்றுகூடாமை	-அவ்வாறே -	2023 ஆம் ஆண்டு 10 மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டுள்ளதோடு, அவ் அனைத்து சந்தர்ப்பத்திலும் போதைப்பொருள் ஒழிப்பு குழுவிற்கு உரிய பிரச்சினைகள் மற்றும் பெறுபேறுகள் தொடர்பாக கலந்துரையாடப் பட்டுள்ளது.
மாவட்ட சுற்றாடல் குழு குறைந்தது இரு மாதத்திற்கு ஒரு தடவை ஒன்றுகூடாமை	-அவ்வாறே -	2023 ஆம் ஆண்டு 03 கூட்டங்கள் மற்றும் 2024 ஆம் ஆண்டு 04 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது.
மாவட்ட விலை நிர்ணயிக்கும் குழு மாதாந்தம் ஒன்றுகூடாமை	-அவ்வாறே -	2022.12.28 – முதல் அரையாண்டு 2023.07.28- இறுதி அரையாண்டு என்றவாறு 2023 ஆம் ஆண்டிற்காக விலை நிர்ணயிக்கும் குழு இரண்டு நடாத்தப்பட்டுள்ளது.
அதிகபட்ச சேவைக்காலம் நிறைவடைந்துள்ள உத்தியோகத்தர்களை சரியான முறையில் இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்காமை.	பிரதேச செயலகங்களில் பிரிவுகளுக்குப் பொறுப்பாக சேவையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்) தவிர்ந்த ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களும் சாதாரண இடமாற்ற முறைமைக்கு கீழ் வருடாந்தம் இடமாற்றம் செய்ய செய்யப்பட்டுள்ளனர். எனினும் கீழ்க் குறிப்பிட்டுள்ள காரணங்களினால்	உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு செயலாளரின் மேற்குறிப்பிட்ட கடிதம் தற்போது வரை நீக்கப்படாமையினால், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அதிக பட்ச சேவைக்காலம் நிறைவடைந்துள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றம்

	அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அதிகபட்ச சேவைக்காலம் நிறைவடைந்தும் இடமாற்றம் செய்ய முடியாதுள்ளனர். • பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கங்களின் எதிர்ப்பு • பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகங்களுக்கு வெளியே அவர்களின் வேண்டுகோளின்றி இடமாற்றம் செய்ய வேண்டாம் என்றும் , மாவட்டத்தினுள் வருடாந்த இடமாற்றத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு 2021.11.30 ஆம் திகதி HA/1/1/9/4 இலக்கமுடைய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் கடிதம்.	தவிர்ந்த ஏனைய அனைத்து பதவிகளுக்குமான இடமாற்றம் சரியாக இடம் பெற்றுள்ளது.
நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான மட்டத்தில் / மறுதலிப்பான மட்டத்தில் / பாதகமான மட்டத்தில் காணப்படல்	2022 ஆம் ஆண்டு கணக்கு தொடர்பாக முனைப்பழியான அபிப்பிராயம் வழங்கப்பட்டுள்ளது. உள்ளக நிருவாகத்தை மேம்படுத்தி சாதகமான கணக்காய்வுக் கருத்தொன்றைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்க் கொள்ளப்படுகின்றது.	2023 ஆம் ஆண்டு கணக்கு தொடர்பான முனைப்பழியான அபிப்பிராயம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக உள்ளக நிருவாகத்தை முறைமை படுத்தவும், வெளிப்டைத்தன்மையுடன் செயற்பட உரிய நடவடிக்கை எடுப்பதோடு பின்னூட்டலோடு சரியான மேற்பார்வையுடன் செயற்படுகின்றது. அதன் மூலம் சாதகமான கருத்தொன்றைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

....

சந்தன தென்னகோன்.
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் கண்டி
மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்
மேலதிக செயலாளர்

Chandana Tennakoon
District Secretary / Government Agent Kandy
&
Additional Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government

....

என். பீ.எல்.எம். சமரசிங்ஹ
பிரதான கணக்காளர்

N.B.A.L.M Samarasinghe
Chief Accountant
For District Secretariat Kandy